**<u>சார்பு நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்</u>**

20.11.2019

**HMOP**. 6/2016

எமசா. 2 செல்வி
குறுக்குவிசாரணை:

நீதிமன்றத்திலிருந் சாட்சியம் அளிக்க சம்மன் வரவில்லை. வழக்கு விவரங்கள் பற்றி தெரியும். என்ன பரிகாரம் என்று தெரியாது. நான் கோட்டுப்புள்ளாம்பாாளையத்தில் குடியிருக்கிறேன். எதிர்மனுதாரரின் பெற்றோரும் அங்குதான் குடியிருந்து வருகிறார். எனக்கு எதிர்மனுதாரர் சொந்தம் இல்லை. என் பக்கத்து வீட்டுக்காரர். உபயமனுதாரர்களுக்கு எப்போது திருமணம் நடந்தது என்பது பற்றி தெரியாது. எதிர்மனுதாரர் , மனுதாரருடன் சண்டையிட்டுக்கொண்டு எத்தனை வருடங்களாக அவரது பெற்றோர் வீட்டில் இருக்கிறார் என்றும், அவர்களுக்குள் என்ன சண்டை என்பது பற்றியும் எனக்கு தெரியாது. உபயமனுதாரர்களின் மகன் பெயர் தீபக், 5ம் வகுப்பு சாராதா பள்ளி, கோபியில் படித்துவருகிறான். வீட்டிலிருந்துதான் பள்ளிக்கு போய்வருகிறான். தீபக்கிற்கு 4 வருடங்களாக நரம்பு சம்மந்தப்பட்ட வியாதி உள்ளது. அதனால், அவனுக்கு என்ன என்ன பிரச்சனைகள் உடலில் ஏற்படுகிறது என்பது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வியாதிக்கு அபி மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொள்கிறார்கள். அந்த வியாதி சம்மந்தமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டதா என்பது பற்றி எனக்கு தெரியாது. உபயதரப்பினர்கள் பிரிந்து வாழ்ந்தபோது பஞ்சாயத்து பேசப்பட்டது பற்றி எனக்கு தெரியாது. சாராதா பள்ளிக்கு நான் போகவில்லை. மனுதாரர் அவரது மகனை பள்ளிக்கு சென்று பார்த்த விவரம் தெரியுமா என்றால் அவர் பள்ளிக்கு பார்க்கவில்லை. எதிர்மனுதாரருக்கு

விபத்து எந்த வருடம் நடந்தது என்பது பற்றி தெரியாது. அதில் அவருக்கு ஏற்பட்ட காயத்திற்காக அபி



மருத்துவமனையில் சிகிச்சை மேற்கொண்டார். வலது தோள்பட்டையில் அடிபட்டது. அறுவை சிகிச்சை செய்யமுடியாது என்று சொல்லிவிட்டார்கள். எதிர்மனுதாரருக்கு, அவரது கணவருடன் சேர்ந்து வாழ நான் அறிவுரை சொல் லவில்லை. அவர்களது மகனுக்கு நரம்பு வியாதி இல்லை என்றும் எதிர்மனுதாரருக்கு ஆதரவாக நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எதிர்மனுதாரருக்கு தோள்பட்டையில் அடிபடவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.